# பாஸ்காக் காலத்தின் நான்காம் ஞாயிறு

# இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-04-21

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்.* 4: 8-12,

*பதிலுரைப்பாடல் திபா.* 118:1, 8-9, 21-23, 26,28,29,

*திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்.* 3:1-2,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 10: 11-18)

*திருப்பலி முன்னுரை*

*அன்புக்குரியவர்களே, நம் ஆயர் இயேசுவின் பெயரால், பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம். நல்லாயன் ஞாயிறை சிறப்பிக்கும் இன்றைய திருவழிபாடு இயேசுவை நமது ஆயராக ஏற்று, அவரது குரலுக்கு செவிகொடுக்கும் நல்ல ஆடுகளாக வாழ நமக்கு அழைப்பு விடுக்கிறது. நமக்காக உயிரைக் கொடுத்த நல்லாயர் இயேசுவுக்குரிய ஒரே மந்தையின் உறுப்பினர்களாக உலக மக்களை ஒன்றிணைக்க நாம் அழைக்கப்படுகிறோம். கடவுளின் அழைப்பை உணர்ந்தவர்களாய், கிறிஸ்து இயேசுவில் இணைந்து வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*எல்லாம் வல்ல இறைவா!*

*திருஅவையின் ஊழியர்கள் அனைவரும் உமது வருகையை அனைவருக்கும் கூறவும் பவுல் இயேசுவின் பெயரால் துணியவுடன் உரையாடியது போன்று, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களை, வழிநடத்தவும் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பின் இறைவா!*

*எம் இளையோர்களை உமது கரம் தருகின்றோம். அவர்கள் புத்துணர்வோடு, தூய உள்ளத்துடன் பணிகளைச் செய்யவும் அவர்கள் எதிர்காலம் புதிய மலரைப்போன்று மலர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நல்ல ஆயன் நானே என்று கூறிய இறைவா!*

*நாங்கள் வாழும் எல்லாவித பாவ வாழ்க்கையிலிருந்தும் மனம் மாறி நல்ல ஆயனின் நல்ல மந்தைகளாக வாழ வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*எம்மைத் தேடி வந்த இறைவா!*

*உமது முதல் வருகையை நினைவு கூருகின்ற நாங்கள் அனைவரும் உமது இரண்டாம் வருகைக்காக எம்மைத் தகுந்த முறையில் தயாரிக்கத் தேவையான அருளையும், ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அரவணைக்கும் இறைவா!*

*தங்களை இளம் வயதில் இறைப்பணிக்காக அர்ப்பணித்து, உமது பணியினை மேற்கொள்ளும் இறைப்பணியாளர்களின் முதிர்ந்த வயதில் தகுந்த பாதுகாப்பும். அன்பும், பராமரிப்பும், உடலுள்ள சுகமும் கிடைத்திட செய்ய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தோழமையின் நாயகனே இறைவா!*

*எங்கள் வாழ்க்கையில் வெறும் வெளி அடையாளங்களைத் தனித்து ஆடம்பரங்களைக் குறைத்து, ஆன்மீகத் தயாரிப்பில் எங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிய வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அமைதியின் தேவனே இறைவா!*

*இயேசு தம் சீடருக்கு வழங்கிய அதே அமைதியை நாங்கள் ஒவ்வொருவரும், மற்றும் உலக மக்கள் ஒவ்வொருவரும் பெற்று மகிழ்ந்திடவும் அனைத்துக் குடும்பங்களிலும் அமைதி, ஒற்றுமை வளர்ந்தோங்கிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*ஆயனின் கட்டளையை கடைபிடிப்போரிடம் அன்பு நிறைவடைகிறது என உணர்த்தும் ஆயனே!*

*கடுமையான வார்த்தைகளைப் பேசியதால் மனம் புண்ணாகி அவமானமாக இருக்கிறது. பல்வேறு தொல்லைகள் என்னைப் புண்ணாக்கி வேதனையால் நொந்து போகச் செய்துவிட்டது என மனம் வருந்தும் உள்ளத்தினரை அன்பு நிறைந்த வார்த்தையால் அரவணைக்கவும், உமது திருக்காயங்களுக்குள் பாதுகாப்பாக அவர்கள் வாழவும் அருள் பொழிய, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*